மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று பேராசிரியர் உரை முடிந்தவுடன் அவை ஒத்திவைக்கப்படும். நாளை கேள்வி நேரம் இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகு வெள்ளை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் உரை; அதன் பிறகு துணை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

7. அரசினர் தீர்மானங்கள்—(ஆ) தொடர்ச்சி.

திரு. க. அன்பழகன்: எனவே, மத்திய அரசு மீது குறையைச் சொல்லி, அதன் மூலம் மாநில அரசு பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்ற முயற்சி நல்லது அல்ல. மத்திய அரசு எப்படி விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருந்தாலும் நமக்குக் கிடைக்கிற வாய்ப்புகளைப் பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையில் பொது விநியோக முறை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும், செம்மைப்படுத்தப்பட வேண்டும், அதற்கு வேண்டிய வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு இந்த வெள்ளை அறிக்கை மீதான என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 28-8-81-ந்தேதி காலை 9 00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிகளான விதிகளும், ஆணைகளும்.

90. 24.6.1950 ஆம் நாளன்று முன்னாள் சுகாதாரத் துறையில் உருவாகி, 10.10 1950 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் 1-ஏ-ல் 407-408 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட 463 ஆம் எண் அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட சென்னை மாநகரின் செனாய்நகர் நகர அமைப்புத் திட்டத்தின் சில வேறுபாடுகளை செய்தல் குறித்து [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

91. இண்டியிலுள்ள சென்னை குதிரைப் பந்தயத் திடலுக்குள் நடைபெறும் மைசூர், உதகமண்டலம், பெங்களூர், ஹைதராபாத், பம்பாய், பூனா மற்றும் கல்கத்தா ஆகிய உள்நாட்டுப் பந்தயங்கள் மீது சில குறிப்பிட்ட வரிகள் விதிப்பது குறித்து 1-7-1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய

அறக்கட்டளைகள் துறையின் 744 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/935) 10(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

92. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 7-1-1981 ஆம் தேதியிடப்பெற்ற வருவாய்த் துறையின் 59 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

93. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தில் சில விதிகளை உருவாக்குவது குறித்து 9-5-1981 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 487 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

17. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1981).

18, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1981).

19. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/1981).

20. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 59/1981).

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்